ஆவடியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளரும் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் முன்னிலையில், திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சே.பிரேம் ஆனந்த் ஏற்பாட்டில், பாரதிய ஜனதா ஒன்றிய அரசின் நலத்திட்ட பிரிவின் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் வினோத், அரசு தொடர்பு பிரிவு திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் குமரேசன் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் என 30 பேர், தி.மு.க.வில் இணைந்தனர். இந்த நிகழ்ச்சியின் தலைமை செயற்குழு உறுப்பினர் நடுக்குத்தகை கே.ஜெ. ரமேஷ், ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் மாவட்ட பிரதிநிதி இ.என்.சேகர், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் தாஸ்(எ) நாராயணசாமி, சபரி உள்பட பலர் இருந்தனர்.

ஆவடி மாநகராட்சியில்

ரூ.8.74 கோடியில் பல்வேறு திட்டப் பணிகளை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், பிப்.17

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி பகுதிகளில் சாலை மற்றும் பல்வேறு திட்ட பணிகளை வேண்டும் என சிறுபான்மை யினர் நலத் துறை அமைச்சர் சா.மு.நாசருக்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது குறித்து அவர் அரசின் கவனத்துக்கு கொண்டு சென்ற தையடுத்து, ஆவடி காமராஜர் நகர் பிரதான சாலை, பட்டா பிராம் அண்ணா நகர் பிரதான சாலை, ஆவடி டேங்க் பேக்டரி சாலை, திருமுல்லை வாயல் குளக்கரை சாலை, சரஸ்வதி நகர் பிரதானச் சாலை ஆகிய சாலை களை சீரமைக்க ரூ. 6.19 கோடி நிதி அண்மையில் ஒதுக்கீடு செய் யப்பட்டது. இந்த நிலையில், மேற்கண்ட சாலைகளை சீரமைக்க அமைச் சர் ஆவடி சா.மு.நாசர் பணிகளை தொடங்கி வைத்து விரைவாக முடிக்க வேண்டும் என சம்பந்தப் பட்ட அதிகாரியிடம் தெரிவித்து கொண்டார் இதனை தொடர்ந்து

2.55 கோடி ரூபாய் மதிப் பீட்டில் ஆவடி மாநகராட்சி 48, வது வார்டு அன்பு நகர், 47 வது வார்டு பஜனை கோவில் தெரு, புதிய அங் கன்வாடி கட்டிடம், அமைக் கும் பணி, 47 வது வார்டு ஸ்ரீராம் நகர், 19வது வார்டு புதிய பூங்கா மற்றும் பணி 35 வது வார்டு ஆவடி மார்க் கெட் பகுதி என் எம் சாலை யில் புதிதாக பேருந்து நிறுத் தத்திற்கு நிழற்குடை அமைக்கும் பணி 12 வார்டு பகுதியில் புதிதாக சமுதாயக் குழு அமைக்க பணி, 1 வார்டு பாரதிநகரில் புதிய சாலை அமைக்கும் பணி களை அமைச்சர் ஆவடி சாமு நாசர் அடிக்கல் நாட் டில் தொடங்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து 47வது வார்டு பஜனை கோவில் தெருவில், 6 வது வார்டில் புதிய ரேஷன் கடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து குடும்ப அட்டைதா ரர்களுக்கு ரேஷன் பொருட் களை வழங்கினார் அப் போது பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றி தந்ததற்காக தமிழ்நாடு முதலமைச்ச ருக்கும் தமிழ்நாடு அரசுக்கும் அமைச்சருக்கும் நன்றிகளை தெரிவித்து கொண்டார்கள்

இந்நிகழ்ச்சிகளில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உத யகுமார், ஆவடி ஆணையர் சரண்யா மாநகரப் பொறுப் பாளர் சண் பிரகாஷ், மண் டலத் தலைவர்கள் ஜி. ராஜேந்திரன், அம்மு பொன் விஜயன், அமுதா பேபிசேகர், ஜோதிலட்சுமி நாராயணபிரசாந்த், பகுதி கழக செயலாளர்கள் பொன் விஜயன், பேபிசேகர், ஜி. நாராயணபிரசாத், நிர்வாகி கள் எஸ்.ஜெயபாலன், பா. நரேஷ் குமார், கு.விமல் வர் ஷன், மாமன்ற உறுப்பினர் கள், வட்டக் கழக செயலா ளர்கள் ஆனந்த், ஆ.சசிகலா, சரளா செந்தில்குமார், சு. பன்னீர் செல்வம் ராஜேஷ் குமார், மதிசெல்வம், சக்தி வேலன், பாண்டியன் விமல், ராஜசுந்தரம், கார்த் திக் காமேஷ், தா.வின் சென்ட் நவராஜ், அழகு விஜயா வின்சென்ட், நவ ராஜ், சக்திவேல், ஞா.வெங் கடேசன், யு.கீதா யுவராஜ், கலை மா.சேகர், சுந்தரி கோபி, பார்த்த சாரதி, ரவிச் சந்திரன், சுந்தரி சிங்காரம், டிசோசா, பைரவி ஜான் கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையிலும் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் முன்னிலையிலும் நடைபெற்ற திருவள்ளூர் சட்டமன்றத்திற்குட்பட்ட கலந்துரையாடல் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா.எம்.பி. சிறப்புரையாற்றிய கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் மாஸ்டர்.பெ.சேகர் மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், ஆர்.டி.இ.ஆதிசேசன், சி. எச்.சேகர், எஸ்.மோகன், இ.குருதாஸ், டாக்டர் வி.சி.ஆர்.குமார், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், ஒன்றிய நகர செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், அணிகளின் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நே.சிற்றரசு – டாக்டர்.கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி – எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., கார்த்திக்மோகன் பங்கேற்பு!

அண்ணாநகர் தெற்குப் பகுதியில் 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் ந.இராமலிங்கம் எம்.சி. தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, பிப்.17

சென்னை மேற்கு மாவட் டம் அண்ணாநகர் சட்டமன் றத் தொகுதி அண்ணாநகர் தெற்குப் பகுதி தி.மு.க. சார் பில் தமிழ்நாடு தலைகுனி யாது பரப்புரைக் கூட்டம் 18-2-2026 புதன்கிழமை மாலை 6 மணியளவில் எம். எம்.டி.ஏ. காலனி தண்ணீர் தொட்டி சாலையில் அண் ணாநகர் தெற்கு பகுதி செய லாளர் ந.இராமலிங்கம் எம். சி. தலைமையில் நடைபெறு கிறது.

அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற் குழு உறுப்பினர் எம். கே.மோகன், தொழில்நுட்ப அணி மாநில துணை செயலா ளர் கார்த்திக்மோகன் ஆகி யோர் முன்னிலை வகிக்கின் றனர்.

பகுதிக் கழக நிர்வாகிகள் ஏ.கே.மூர்த்தி, ஆர்.எஸ்.கில் பர்ட் பானுமதி கிருஷ்ண சாமி, வட்ட செயலாளர்கள் ந.அதியமான் எம்.சி., இரா. பொன்னுரங்கம், வெ.சண்மு கம், இரா.நவீந்திரகுமார், தெ.கருணாநிதி, வி.எம்.சிவா ஆகியோர் வரவேற்புரை யாற்றுகின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, மருத்துவர் அணி தலைவர் டாக்டர் கனிமொழி, என். வி.என்.சோமு எம்.பி ஆகி யோர் சிறப்புரையாற்று கின் றனர்.

மேற்கண்ட பொதுக்கூட் டத்தில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அண்ணாந கர் சட்டமன்ற தொகுதி மேலிடப் பார்வையாளர் வே.கௌதமன், து.விக்டர். ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை செல்வன். ஏ.சங்கீதா. ஜெ. அகஸ்டின்பாபு. ஐ.கென் னடி. டாக்டர்.நா.சந்திரபாபு, சி.சேரன், ஏ.டி.முருகன், கராத்தே என்.ஆனந்தன் இராணி ரவிச்சந்திரன் எம்.சி. எஸ்.ராம்குமார், வழக்கறி ஞர்.நன்மாறன், வழக்கறி ஞர்.ஆனந்தகுமார், ஜி.சத்திய குமார். வழக்கறிஞர் ப. பிரகாஷ், துபாய் வி.ஆர். விஜய், யோகேஸ்வரி சந்தரே சன், எஸ்.அசோக்குமார். வழக்கறிஞர் தேவந்திரன், குட்டி(எ)சுப்பிரமணி, எம். சிவசிதம்பரம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற் கின்றனர்.

இறுதியில் அண்ணா நகர் தெற்கு பகுதி துணை செய லாளர் எஸ்.பி. குமார் நன்றி கூறுகிறார்.

கழக துணைப் பொதுச்செயலாளர் - மண்டல பொறுப்பாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கும்மிடிப்பூண்டி மற்றும் பொன்னேரி சட்டமன்றத் தொகுதிகளில் கலந்துரையாடல் கூட்டம்!

மாவட்ட கழகப் பொறுப்பாளர் - வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிவிப்பு!

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் கும்மிடிப்பூண்டி மற்றும் பொன்னேரி தொகுதிகளில் இன்று (17.02.2026 - செவ்வாய்க்கிழமை) கீழ்கண்ட அட்டவணைப்படி தொகுதி வாரியாக கலந்துரையாடல் கூட்டம் நடைபெறுகிறது.

தொகுதி	இடம்	நேரம்
கும்மிடிப்பூண்டி	ஹோட்டல் லி ராஜ்கோட், கும்மிடிப்பூண்டி	மாலை 3.00
பொன்னேரி	பி.ஆர்.பி கிராண்ட் மஹால், தச்சூர்	மாலை 4.00

மேற்கண்ட நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர்கள் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் நகராட்சி பேரூராட்சி மன்ற தலைவர்கள் துணைத் தலைவர்கள் உறுப்பினர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ்

பொறுப்பாளர் - திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.



சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்று (16.02.2026) நடைபெற்ற Indian Library Congress துவக்க விழா மற்றும் "Library Policy: Federalism and States கருத்தரங்க கூட்டத்தில் கலந்து கொண்டு இரா.கிரிராஜன் எம்.பி. உரையாற்றினார். கேரள CPI(M) நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் Dr.சிவதாசன் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் இந்து என்.ராம், இறையன்பு (IAS (Retd.), , மற்றும் கர்நாடகா காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எல். ஹனுமந்தையா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியின்

2025-26 நிதியாண்டிற்கான முதல் காலநிலை நிதிநிலை அறிக்கை, மேயர் திருமதி ஆர்.பிரியா வெளியிட்டார்!

சென்னை,பிப்.17–

பெருநகர சென்னை மாநகராட்சி யின் 2025–26 நிதியாண்டிற்கான முதல் காலநிலை நிதிநிலை அறிக்கை யினை நேற்று (16.02.2026) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் மேயர் திருமதி ஆர்.பிரியா வெளியிட துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.ம.பிரதிவிராஜ், பெற்றுக்கொண் டார். இந்நிகழ்வில், மதிப்பிற்குரிய துணை மேயர்மு.மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி 2025–26 நிதியாண்டிற்கான முதல் காலநிலை நிதிநிலை அறிக்கையை வெளியிட்டுள்ளது. இது நகராட்சி நிதித் திட்டமிடலில் காலநிலை நடவடிக்கை களை இணைப்பதில் ஒரு குறிப்பிட த் தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. சென்னை காலநிலை செயல் திட்டத்துடன் (2023) இணைந்த இந்த முயற்சி, பொறுப்பான செலவின திட்ட மிடல், கண்காணிப்பு மற்றும் பொறுப்பு டைமை மூலம் காலநிலை அபாயங் களை நிவர்த்தி செய்வதற்கான நகர த்தின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

'காலநிலை நிதிநிலை அறிக்கை என்பது ஒரு நகரத்தின் காலநிலை உறு திப்பாடுகளை அதன் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் செலவு முடிவுகளின் மையத்தில் வைக்கும் ஒரு நிர்வாகக் கட்டமைப்பாகும்.'

2025–26 நிதியாண்டில், மூலத னச் செலவினங்களுக்காக பெருநகர சென்னை மாநகராட்சி ரூ.3,190.61 கோடி நிதியினை ஒதுக்கியுள்ளது, அதில் ரூ.1,341.2 கோடி (42.04%) காலநிலை தொடர்பான செலவினங்க ளாக அடையாளம் காணப்பட்டுள்ளது. துறை வாரியாக, நகர்ப்புற வெள்ளம் மற்றும் நீர் பற்றாக்குறை ஆகியவை காலநிலை செலவினங்களில் மிகப்பெ ரிய பங்கை (62.24%) கொண்டுள்ளன, அதைத் தொடர்ந்து கழிவு மேலாண்மை (26.15%) மற்றும் நிலையான இயக்கம் (9.96%) ஆகியவை உள்ளன. குறிப்பி டத்தக்க வகையில், தொடர் முயற்சிகள் காலநிலை நிதிநிலை அறிக்கை மிகப் பெரிய அங்கமாக 62.8% உள்ளது, இது மழை, வெள்ளம் மற்றும் நீர் தேக்கம் போன்ற காலநிலை பாதிப்புகளை நிவர்த்தி செய்வதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மிக உதவியாக உள்ளது.

அடையாளம் காணப்பட்ட கால நிலை தொடர்பான திட்டங்களில், மழை நீர் வடிகால்கள் மற்றும் மதகுகளை மேம்படுத்துதல், கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங் களில் பயோ மைனிங் முறையில் குப் பைளை பிரித்து நிலத்தை மீட்டெடுத்தல், முழுமையான வீதிகள் மற்றும் சுகாதார நடைபாதை முயற்சிகள், நீர் உறிஞ்சும் பூங்காக்கள் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்குதல், ஏரி களை மீட்டமைத்தல், குளங்களை புதுப் பித்தல் மற்றும் பள்ளிக் கட்டடங்கள் ஆகியவை அடங்கும். இந்த ஆண்டு காலநிலை நிதிநிலை அறிக்கையின் கீழ் அளவிடப்பட்ட நடவடிக்கைகள் 4.1 மில்லியன் மெட்ரிக் டன் கார்பன்–டை–ஆக்சைடு (CO) சமமான (tCOe) குறைப்பை வழங்கும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

இந்த தொடக்க காலநிலை நிதி நிலை அறிக்கை, C40 நகரங்களின் ஆதரவுடன் பெருநகர சென்னை மாநக ராட்சியின் நிதி மேலாண்மை அலகு (FM பிரிவு) தலைமையில் நடத்தப்படு கிறது. இது பெருநகர சென்னை மாநக ராட்சிக்குள் உள்ள 10 முக்கிய துறைக ளில்தொடர்புடையது. பெருநகர சென்னை மாநகராட்சியின் நிறுவன வள திட்ட மிடல் (ERP) அமைப்பில் காலநிலை நிதிநிலை அறிக்கையினை ஒருங்கி ணைக்கிறது, இது காலநிலை தொடர் பான செலவினங்களை முறையாகக் கண்காணிக்கவும், நிறுவன பொறுப்பு ணர்வை வலுப்படுத்தவும் உதவுகிறது.

இந்த முயற்சியின் மூலம், சென்னை மாநகரம் பொது நிதியை காலநிலை முன்னுரிமைகளுடன் சீர மைப்பதை மேம்படுத்துகிறது. இந்தியா வில் காலநிலைக்கு ஏற்ற நகர்ப்புற நிர்வாகத்தில் அதன் தலைமையை வலுப்படுத்துகிறது. 2025–26 நிதி யாண்டிற்கான காலநிலை நிதிநிலை அறிக்கை, பெருநகர சென்னை மாநக ராட்சியின் www.chennaicorporation.gov.in என்ற இணைய தளத்தில் இன்று (16.02.2026) பதி வேற்றம் செய்யப்பட்டுள்ளது

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா பிகே. ராஜகோபால்

பிப்ரவரி 17 (2002)

திருவள்ளூர் மாவட்டம், போரூர் நகரச் செயலாளராக தொடர்ந்து முப்பது வருடங்களாக பணியாற்றியவர்.

சைதாப்பேட்டை கூட்டுறவு நிலவள வங்கியின் இயக்குனராகவும் பணியாற்றியவர்.

மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் சிறையில் இருந்துள்ளார்.

மேலும், கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோவை கா.ரா. சுப்பையன்

பிப்ரவரி 17 (2019)

தனது கல்லூரி காலங்களிலேயே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கோவை மாவட்டக் கழகச் செயலாளராகவும் – கழக தீர்மானக்குழுச் செயலாளராகவும், உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கோவை நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.